# யூன்– 26 – செவ்வாய்

## புனித யோசே மரியா எஸ்கிறிவா

## “தூய்மையானது எதையும் நாய்களுக்குக் கொடுக்க வேண்டாம்“–மத்தேயு7 : 6

## முதல் வாசகம் : 2 அரசர் 19:9 –11, 14 – 21, 31 – 36

அக்காலத்தில், அசீரிய மன்னன், எத்தியோப்பிய மன்னனான திராக்கா தனக்கு எதிராய்ப் படைதிரட்டிக்கொண்டு வருவதாகக் கேள்வியுற்று எசேக்கியாவிடம் மீண்டும் தூதரை அனுப்பி,. ”யூதா அரசன் எசேக்கியாவிடம் நீங்கள் இவ்வாறு கூறுங்கள் “எருசலேம் அசீரிய மன்னனின் கையில் ஒப்புவிக்கப்பட மாட்டாது“ என்று கூறும் உன்கடவுளை நம்பி ஏமாந்துவிடாதே. இதோ! அசீரியா மன்னர்கள் எல்லா நாடுகளுக்கும் செய்திருப்பதையும், அவற்றை முற்றிலும் அழித்ததையும் நீ கேள்விப்பட்டிருப்பாய். அப்படியிருக்க நீமட்டும் தப்பிவிட முடியுமா? எசேக்கியா தூதரின் கையிலிருந்த மடலை வாங்கி வாசித்தபின் கோவிலினுள் சென்று ஆண்டவர் திருமுன் மடலை விரித்துவைத்தார். மேலும் எசேக்கியா ஆண்டவரை மன்றாடிக் கூறியது: ”கெருபுகள்மேல் வீற்றிருக்கும் இஸ்ரயேலின் கடவுளான ஆண்டவரே! இவ்வுலகத்து அரசுகளுக்கெல்லாம் நீர் ஒருவரே கடவுள்! விண்ணையும் மண்ணையும் படைத்தவர் நீரே! ஆண்டவரே! நீர் செவி சாய்த்துக் கேட்டருளும். ஆண்டவரே! உம்விழிகளைத் திறந்து என்னை நோக்கியருளும். தூதனுப்பி என்றுமுள கடவுளைப் பழித்துரைக்கும் சனகெரிபின் சொற்களைக் கேட்பீராக! ஆண்டவரே! அசீரிய மன்னர்கள் வேற்றினத்தாரையும், அவர்கள் நாடுகளையும் அழித்தது உண்மைதான்! அவர்கள் வேற்றினத்தாரின் தெய்வச் சிலைகளை நெருப்பிலிட்டு எரித்தனர். ஏனெனில் அவை உண்மைக் கடவுளல்ல் மரத்தாலும் கல்லாலும் மனிதன் செய்தவையே் எனவே அவற்றை அழிக்க முடிந்தது. எங்கள் கடவுளாகிய ஆண்டவரே! இப்பொழுது இவன் கையிலிருந்து எங்களைக் காத்தருளும். இதன் மூலம், நீர் ஒருவரே கடவுளாகிய ஆண்டவர் என்பதை உலகின் எல்லா அரசுகளும் அறிந்துகொள்ளும்.” அப்பொழுது ஆமோட்சின் மகன் எசாயா எசேக்கியாவிடம் ஆளனுப்பிச் சொன்னது ”இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் கூறுவது இதுவே. அசீரிய மன்னன் சனகெரிபைப்பற்றிய உன்வேண்டுதலைக் கேட்டேன். அவனுக்கு எதிராக ஆண்டவர் கூறிய வார்த்தை இதுவே. கன்னிமகள் சீயோன் உன்னை இகழ்கிறாள் உன்னைப் பார்த்து நகைக்கிறாள் மகள் எருசலேம் பின் நின்று தலையசைக்கிறாள். ஏனெனில் எஞ்சியோர் எருசலேமிலிருந்து வெளியேறுவர். உயிர் பிழைத்தோர் சீயோன் மலையினின்று புறப்படுவர். படைகளின் ஆண்டவரது ஆர்வமே இதை நிறைவேற்றும்! ஆதலால் ஆண்டவர் அசீரிய மன்னனைக் குறித்து இவ்வாறு கூறுகிறார் இந்நகருக்குள் அவன் நுழைய மாட்டான் அதில் அம்பு எய்யமாட்டான் அதை எதிர்த்துக் கேடயத்துடன் வரமாட்டான். அதற்கு எதிராக முற்றுகைத்தளம் எழுப்பமாட்டான். அவன் வந்தவழியே திரும்பிப் போவான் இந்நகருக்குள் நுழையவேமாட்டான் என்கிறார் ஆண்டவர். இந்நகரை நான் பாதுகாப்பேன் என்பொருட்டும் என் ஊழியன் தாவீதின் பொருட்டும் நான் அதை விடுவிப்பேன்.” அன்றிரவு ஆண்டவரின் தூதர் புறப்பட்டுச் சென்று அசீரியரின் பாளையத்தில் இலட்சத்து என்பத்தையாயிரம் பேரைக் கொன்றார். மக்கள் காலையில் எழுந்தபோது அங்கு அனைவரும் செத்துப் பிணமாய்க் கிடந்ததைக் கண்டனர். எனவே அசீரிய மன்னன் சனகெரிபு திரும்பிச் சென்று நினிவேயில் தங்கியிருந்தான்.

**பதில்பாடல் :** கடவுள் தம் நகரை எந்நாளும் நிலைத்திருக்கச் செய்வார்.

## நற்செய்தி : மத்தேயு7 : 6,12 - 14

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது தூய்மையானது எதையும் நாய்களுக்குக் கொடுக்க வேண்டாம். அவை திருப்பி உங்களைக் கடித்துக் குதறும். மேலும் உங்கள் முத்துகளைப் பன்றிகள் முன் எறிய வேண்டாம் எறிந்தால் அவை தங்கள் கால்களால் அவற்றை மிதித்து விடும்.ஆகையால் பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே. இடுக்கமான வாயிலின் வழியே நுழையுங்கள் ஏனெனில் அழிவுக்குச் செல்லும் வாயில் அகன்றது வழியும் விரிவானது அதன் வழியே செல்வோர் பலர்.வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது வழியும் மிகக் குறகலானது. இதைக் கண்டுபிடிப்போர் சிலரே“ என்றார்.

**தியானம்:** இந்த உலகம் தனக்கென்று வரையறைகளை வைத்துக்கொண்டு மக்களைத் தவறான பாதையில் வழிநடத்துகிறது. இந்த உலகத்தோடு நாம் இணைந்து சென்றால் புனித வாழ்வு வாழ முடியாது. அதனை எதிர்த்து வாழ்வது என்பது எளிதானதுமல்ல. இந்த இரண்டிற்கும் இடையேயான போராட்ட வாழ்வே நமது விசுவாச வாழ்வு. அந்த உண்மையான கிறிஸ்தவ வாழ்விற்கு நாமனைவரும் அழைக்கப்படுகிறோம் என்பதனை நற்செய்தி (மத்தேயு 7:6,12–14) தெளிவுபடுத்துகிறது. எமது கத்தோலிக்க வாழ்வின் விழுமியங்கள் எந்தக்காலத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் சமரசம் செய்துகொள்ள முடியாதவை. சமரசம் செய்துகொண்டால், நாம் எமது வாழ்விலிருந்து கிறிஸ்துவை விலக்குவதாக அர்த்தமாக்கப்படும். கிறிஸ்துவோடு இணைந்திருப்பதாயின் அவரது விழுமியங்களையும் கிறிஸ்தவன் தாங்கிப்பிடிக்கவேண்டும். சவால்களையும் சந்திக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்வென்பது புனிதமாக வாழ்வதற்கான அழைப்பு அந்த வாழ்வு எளிதான வழ்வல்ல. நற்செய்தியில் தெரிவிக்கப்படும் “தூய்மையானது எதையும் நாய்களுக்குக் கொடுக்கவேண்டாம். அவை திருப்பி உங்களைக் கடித்துக் குதறும். மேலும், உங்கள் முத்துக்களைப் பன்றிகள் முன் எறியவேண்டாம். எறிந்தால் அவை தங்கள் கால்களால் அவற்றை மிதித்துவிடும்” என்னும் அழியா இறைவார்த்தைகளை நாம் ஆழமாக உள்நோக்குவோமாயின், “பாத்திரமறிந்து பிச்சையிடு“ என்னும் பொன்மொழிக்கேற்ப அறிவுரைகள், பாராட்டுக்கள், உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்துதல் என்பவற்றைத் தகுதியற்றவர்களுக்கு வழங்கவேண்டாம் என நாம் வேறுவிதமாகப் பொருள்கொள்ளலாம். நல்ல கருத்துக்களை ஆலோசனைகளைத் திறந்த மனம் கொண்டோரிடம் மட்டுமே நாம் பகிர்ந்துகொள்ளவேண்டும். குறுகிய மனம் கொண்டோர் எதையும் குதர்க்க மனதுடன், குறைகாணும் உளத்துடன் வாதாடுவோருடன் பேசுவது நேரத்தையும், ஆற்றலையும் விரயமாக்குவதுடன், நமக்கு மன உளைச்சலையும், சலிப்பையும் கற்றுத்தரவில்லையா? எனவே, நல்லவைகளை நல்லோருக்கே வழங்குவோம். தீயோரிடம் வீணாக்க வேண்டாம். ஆண்டவர் இயேசுவின் காலத்தில் தொடக்க கால கிறிஸ்தவர்கள் சவாலான வாழ்வை ஏற்று வாழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்த சூழ்நிலை ஒரு இறுக்கமான, கடினமான சூழ்நிலை. பாதுகாப்பில்லாத சூழ்நிலை. அப்படியிருந்தாலும், அவர்கள் புனித வாழ்வு வாழ முழுமுயற்சியுடன் வாழ்ந்தார்கள். நாமும் அவர்களைப் பின்பற்றி வாழ்வோம்.